கந்தரநுபூதி

Verses 1 to 51	1 to 52
The Esoteric Significance of: Kandar Anubhuti.	53 to 56

1

கந்தர் அநுபூதி

காப்பு

நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந்து உருக,
தஞ்சத்து அருள் ஷண்முகனுக்கு, இயல் சேர்
செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.

(1) ஆடும் பரி, வேல், அணி சேவல் எனப்
பாடும் பணியே, பணியா அருள்வாய்,
தேடும், கஜ மா முகனைச், செருவில்,
சாடும், தனி யானை சகோதரனே.

2

கந்தர் அநுபூதி

நெஞ்சக் கன கல்லும் : நெஞ்சம் எனப்படும் (கனத்த) இளகாத கல்லும்
நெகிழ்ந்து உருக = இளகி உருகும்படி
தஞ்சத்து அருள் = தன்னைச் சரண் அடைந்தவர்க்கு அருள் பாலிக்கின்ற
ஷண்முகனுக்கு = ஷண்முகப் பெருமானுக்கு உரியதாய
இயல் சேர் = இயற்றமிழின் பாற் பட்ட (தொடுக்கப்பட்ட)
செஞ் சொற் புனை = சிறந்த சொற்களால் புனையப்பட்ட
மாலை = இந்தப் பாமாலையானது
சிறந்திடவே = சிறப்புடன் விளங்க வேண்டிப்
பஞ்சக்கர ஆனை = ஐந்து திருக்கரங்களை உடைய விநாயகப் பெருமானின்
பதம் பணிவாம் = திருவடிகளைப் பணிந்து போற்றுவோம்

(1) தேடும் கஜமா முகனை = போரைத் தேடி வந்த கஜமுகாசுரனை
செருவில் = போரில்
சாடும் = மோதி அடக்கி ஒடுக்கின
தனி = ஒப்பற்ற
யானை சகோதரனே = கணபதியின் தம்பியே
ஆடும் பரி, வேல் = தோகையை விரித்து ஆடும் மயிலைத் துதித்தும்,
வேலாயுதத்தைத் துதித்தும்
அணி சேவல் என = அழகிய சேவலைத் துதித்தும்
பாடும் பணியே = பாடுகின்ற தொண்டே
பணியா = நான் மேற்கொள்ளும் தொண்டு ஆகும்படி
அருள்வாய் = நீ திருவருள் பாலிப்பாயாக

(2) உல்லாச, நிராகுல, யோக, ஹித,
சல்லாப, விநோதனும், நீ அலையோ
எல்லாம் அற, என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா, சுர பூபதியே.

(3) வானோ புனல் பார் கனல் மாருதமோ
ஞானோதயமோ, நவில் நான் மறையோ
யானோ மனமோ எனை ஆண்ட இடம்
தானோ, பொருள் ஆவது, சண்முகனே.

(2) முருகா! சுர பூபதியே = முருகா! தேவர்களின் அரசே!
உல்லாச = இன்பமுடையவரும்
நிர்ஆகுல = துன்பம் (கலக்கம்) இல்லாதவரும்
யோக, இத = யோகமூர்த்தியும், இனிமையாகப் பேசுபவரும்
சல்லாப = மகிழ்ச்சியைத் தருகின்றவரும்
விநோதனும்நீஅல்லை அருள் விளையாடல்களைப் புரிபவரும் நீரல்லவோ
எல்லாம் அற = சகல பந்தங்களும் நீங்கி ஒழியும்படி
என்னை = யான் எனது எனப்படும் அகங்கார மமகாரங்கள்
இழந்த = ஒழிந்து தொலையும்
நலம் = மேலான பேரின்ப நிலையை
சொல்லாய் = உபதேசித்தருளுக.

(3) சண்முகனே = சண்முகப் பெருமானே
பொருள் ஆவது = உண்மைப் பொருள் (நித்தியப் பொருள்) என்பது
வானோ, புனல், பார் = ஆகாயமோ? நீரோ?, நிலனோ?
கனல் மாருதமோ = நெருப்போ? காற்றோ?
ஞானோதயமோ = ஞானம் உதயமாகும் நிலைதானோ
நவில் நான்மறையோ = ஓதப்படுகின்ற நான்கு வேதங்களோ?
யானோ மனமோ = நான் என்று கூறப்படும் அதுவோ? மனம் எனப்படுவதோ
எனை ஆண்ட இடம்தானோ = என்னை ஆட்கொண்ட இடமாகிய திருவண்ணாமலைதானோ

(4) வளைபட்ட கை மாதொடு, மக்கள் எனும்,
தளைபட்டு அழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டு எழு சூர் உரமும் கிரியும்
தொளைபட்டு உருவத் தொடு வேலவனே

(5) மக மாயை களைந்திட வல்ல பிரான்
முகம் ஆறு மொழிந்தும் ஒழிந்திலனே
அகம் மாடை மடந்தையர் என்று அயரும்
சக மாயையுள் நின்று தயங்குவதே

ஒழிந்திலனே: ஏன்? வாக்கு மட்டும் கூறுகின்றது. மனம் அதனோடு ஒன்றவில்லை. அதனால் சகமாயை நீங்கவில்லை. ஆறுமுகம் ஆறுமுகம் என்று ஜெபித்தால் மாத்திரம் போதாது. மனமும் ஒன்று பட வேண்டும். ஒன்று பட்டுப் பன்னுள் ஜெபித்த பின்னரே, முருகன், திருவருள் சுரந்து வந்து மெய்ப்பொருளை உபதேசிப்பார்- உணர்த்துவார்.

(4) கிளைபட்டு எழு = சுற்றத்தினர் சூழப் (போருக்கு) எழுந்த
சூர் உரமும் = சூரபன்மனுடைய மார்பையும்
கிரியும் = கிரவுஞ்ச மலையையும்
தொளைபட்டு உருவ = தொளைத்து ஊடுருவிப் போகும்படி
தொடு வேலவனே = பிரயோகித்த வேலாயுதத்தை உடையவரே
வளைபட்ட கை = வளையல்களையணிந்த கைகளையுடைய
மாதொடு = மனைவியுடன்
மக்கள் எனும் = மக்கள் (உறவினர்) என்று கூறப்படுகின்ற
தளை பட்டு அழிய = பந்தத்திற் அகப்பட்டு அழிந்து போதல்
தகுமோ தகுமோ = நீதியா? நீதியா? (நீதி அன்று)

(5) மக மாயை = மகா மாயை : வலிமை மிக்க பெரிய மாயைகளையும்
களைந்திட - - - = நீக்க வல்ல ஆறுமுகப் பிரானுடைய
முகம் ஆறும் = ஆறு திருமுகங்களையும்
மொழிந்தும் = என் நாவாரனது "ஆறுமுகம் ஆறுமுகம்" என்று பன்முறை கூறியும் (அல்லது)·※·
அகம், மாடை = வீடு, பொன் (செல்வம்)
மடந்தையர் என்று = மாதர்கள் என்று இவை தமை நினைத்து
அயரும் = சோர்வு அடையச் செய்கின்ற
சக மாயையுள் நின்று : உலக மாயையுள் கிடந்து
தயங்குவது = கலங்குவதை
ஒழிந்திலனே = விட்டு விலகப் பெற்றேனில்லையே.

※ முருகன் தன் முகங்கள் ஆறினுடைய தத்துவத்தையும் அடியேனுக்கு உணர்த்திய பின்பும்,

(6) திணி ஆன மனோ சிலை மீது உன தாள்
அணி ஆர் அரவிந்தம் அரும்புமதோ
பணி யா என வள்ளி பதம் பணியும்
தணியா அதி மோக தயாபரனே

(7) கெடுவாய் மனனே, கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறை தாள் நினைவாய்
சுடுவாய், நெடு வேதனை தூள் படவே,
விடுவாய் விடுவாய், வினை யாவையுமே.

(6) பணி யா என = (எனக்கு இடும்) கட்டளைகள் எவையோ என்று வினவி
வள்ளி பதம் பணியும் = வள்ளியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கும்
தணியா = குறைவு படாத
அதி மோக = மிக்க காதல் கொண்டுள்ள
தயாபரனே = மிகுந்த கருணைக் கடவுளே
திணி ஆன = மிகவும் கடினமான
மனோ சிலை மீது = மனம் என்னும் கல்லின் மீது
உன தாள் = உமது திருவடியாகிய
அணி ஆர் அரவிந்தம் = அழகு நிரம்பிய தாமரை (ஆர் : நிறைதல்)
அரும்புமதோ = மலருமோ

--- --- ---

(7) மனனே கெடுவாய் : ஏ மனமே! வீணே கெட்டொழிகின்றாய்!
கதி கேள் : நீ உய்யும் வழியைக் கூறுகின்றேன்; கேட்பாயாக
கரவாது இடுவாய் : உள்ளத்தில் ஒளித்தல் இல்லாது, தானம் செய்வாயாக
வடிவேல் இறை தாள் நினைவாய் : கூரிய வேலை ஏந்திய கடவுள் முருகவேளின் திருவடிகளை தியானிப்பாயாக
நெடு வேதனை : (அங்ஙனம் நீ செய்தால்) பெரிய வருத்தும் நோய்களெல்லாம்
தூள் படவே : தூள் பட்டொழிய
சுடுவாய் : சுட்டு எரிப்பாய்
வினை யாவுமே : வினைகள் எல்லாவற்றினின்றும்
விடுவாய் விடுவாய் : விரைவில் நிச்சயமாக விடுதலை பெறுவாய்

(8) அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும், இப்
பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா
குமரன், கிரி ராசகுமாரி மகன்
சமரம் பொரு, தானவ நாசகனே

(9) மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப் பட்டு
ஊசல் படும் பரிசு என்று ஒழிவேன்
தட்டு ஊடு அற, வேல், சயிலத்து எறியும்
நிஷ்டூர, நிராகுல, நிர்ப்பயனே.

(8). குமரன் = குமாரக் கடவுள்
கிரிராச குமாரிமகன் = இமயமலை அரசனது மகள் பார்வதியின் மகன்
சமரம் பொரு = போர் புரிந்த
தானவ நாசகனே = அசுரர்களை அழித்தவரே
அமரும் பதி, கேள் = யான் வசிக்கும் ஊர், உறவினர்,
அகம் ஆம் எனும் = நான் என்று சொல்லப்படுகின்ற
இப்பிமரம் கெட = இந்த மயக்க அறிவு கெட்டொழியுமாறு
மெய்ப் பொருள் = உண்மைப் பொருள் இன்னதென்று
பேசியவா = உபதேசித்த அருள் திறம் ஆச்சரியகரமா யிருக்கின்றது

. . . .

(9) சயிலத்து = கிரவுஞ்ச மலையின் மீது
தட்டு ஊடு அற = தடைகள் இன்றி அதன் நடுவிடம் ஊடுருவிச் செல்லும்படி
வேல் எறியும் = வேலாயுதத்தை ஏவிய
நிட்டூர = கடுமை வாய்ந்தவரே
நிராகுல = கலக்கம் இல்லாதவரே
நிர்ப்பயனே = பயம் அற்றவரே
மட்டூர் குழல்.. = வாசனை கமழ்கின்ற கூந்தல் உடைய பெண்களது (மட்டு = வாசனை)
மையல் வலைபட்டு = மோக வலையில் அகப்பட்டு
ஊசல் படும் = உள்ளம் தடுமாற்றம் - அலைச்சல் - அடையும்
பரிசு = தன்மையை
என்று ஒழிவேன் = எக்காலத்தில் நான் விட்டு நிம்மதி அடைவேன்

11

(10) கார்மா மிசை காலன் வரின், கலபத்
தேர் மா மிசை வந்து எதிரப் படுவாய்
தார் மார்ப, வலாரி தலாரி எனும்
சூர் மா மடியத் தொடு வேலவனே.

(11) கூகா என, என் கிளை கூடி அழப்
போகா வகை, மெய்ப் பொருள் பேசியவா
நாகாசல வேலவ, நாலு கவித்
தியாகா, சுரலோக சிகாமணியே.

12

(10) தார் மார்ப = மாலைகளை அணிந்த மார்பனே
வல அரி = வலாசுரனுக்கு (அரி) பகைவனாம் இந்திரனுடைய
தல அரி எனும் = தலைமையாம் பொன்னுலகுக்கு பகைவன் என்றிருந்த
சூர் மா மடிய = சூரனும் மாமரம் அழியும்படி
தொடு வேலவனே = செலுத்தின வேலாயுதக் கடவுளே
கார் மா மிசை = கரிய எருமையின் மீது
காலன் வரின் = யமன் (என்னைப் பிடிக்க) வந்தால்
கலப மா தேர்மிசை = தோகைப் பரியாம் வாகனத்தின் மீது
வந்து : எழுந்தருளி வந்து
எதிரப் படுவாய் = என் எதிரே தரிசனம் தந்தருளுவாயாக
(கலபத்து ஏர் மா) : தோகையினால் அழகிய மயில் பரி

(11) நாக அசல! வேலவ! = நாககிரியாகிய திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளியுள்ளவரே! வேலனே!
நாலு கவித்தியாகா = ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நாலு கவிகளைப் பாடும் திறத்தைத் தந்தருள்பவரே
சுரலோக சிகாமணி = தேவலோகத்துச் சிரோரத்தினமே
கூகா என = கூகா என்று ஓலமிட்டு
என் கிளை = எனது சுற்றத்தார்
கூடி அழ = ஒன்று கூடி அழும்படி
போகா வகை = இறந்து போகாத வண்ணம்
மெய்ப் பொருள் = உண்மை ஞானப் பொருளை
பேசியவா : நீ எனக்கு உபதேசித்த அற்புதம் தான் என்னே
உன் கருணையை என்னென்று வியப்பேன்

(12) செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு, சொல் அற, என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

(13) முருகன், தனி வேல் முனி, நம் குரு என்று
அருள் கொண்டு அறியார், அறியும் தரமோ
உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று
இருள் அன்று, ஒளி அன்று என நின்ற அதுவே.

(12) செம்மான் மகளை திருடும் } = செவ்விய இலக்குமியாம் மான் ஈன்ற புதல்வியாகிய வள்ளியை களவிற் கொண்டு சென்ற கள்வன்
பெம்மான் . . . = பெருமானாகிய முருகன்
பிறவான் இறவான் = அவனுக்கு பிறப்பு, இறப்பு இல்லை
சொல் அற சும்மா இரு = பேச்சற்ற மௌன நிலையில் இரு
என்றலுமே = என்று உபதேசித்தவுடனே
அம்மா = இது என்ன அதிசயம்!
பொருள் ஒன்றும் அறிந்திலனே } : பிரபஞ்ச விஷயங்கள் ஒன்றும் நான் உணரவில்லை
: உலக விஷயங்கள் யாவும் அற்றன.

(13) உரு அன்று, அரு அன்று = உருவப் பொருளும் அன்று, அருவப் பொருளும் அன்று
உளது அன்று, இலது அன்று = உள்ள பொருளும் அன்று, இல்லாத பொருளும் அன்று
இருள் அன்று, ஒளி அன்று = இருளும் அன்று, ஒளியாகிய பொருளும் அன்று
என நின்ற அதுவே = என்று சொல்லும் தன்மையில் நின்ற அப்பரம் பொருளே
முருகன் = முருகப்பெருமான் என்றும்
தனி வேல் முனி = ஒப்பற்ற வேலாயுதத்தை ஏந்திய முனிவன் என்றும்
நம் குரு என்று = நமது பரமகுரு என்றும்
அருள் கொண்டு = அந்த முருகவேளின் திருவருளைக் கொண்டு
அறியார் = அறிய மாட்டாதவர்கள்
அறியும் தரமோ = அறிய வல்லவர் ஆவரோ? ஆகார்

(14) கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய், மனனே, ஒழிவாய் ஒழிவாய்,
மெய், வாய், விழி, நாசியொடும் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே.

(15) முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்
பொரு புங்கவரும் புவியும் பரவும்
குரு புங்கவ, எண் குண பஞ்சரனே

எண் குணங்கள்
① தன் வயத்தனாதல் ② தூய உடம்பினனாதல் ③ இயற்கை உணர்வினனாதல் ④ முற்றும் உணர்தல் ⑤ இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல் ⑥ பேரருளுடைமை ⑦ முடிவிலாற்றலுடைமை ⑧ வரம்பிலின்பமுடைமை.

(14) மனனே = ஏ மனமே
மெய், வாய், விழி = உடம்பு, வாய், கண்
நாசியொடும் = மூக்குடன்
செவியாம் = காது ஆகிய
ஐவாய் வழி செல்லும் = ஐம்பொறிகளின் வழியே செல்லும்
அவாவினையே = ஆசைகளை
ஒழிவாய், ஒழிவாய் = முற்றிலும் விடுவாய் விடுவாய், அதனால்,
கைவாய் = கையிடத்தே
கதிர்வேல் முருகன் = ஒளி பொருந்திய வேலை ஏந்திய முருகவேளின்
கழல் பெற்று = திருவடியைப் பெற்று
உய்வாய் = உய்தி - நற்கதியைப் பெறுவாயாக.

---

(15) பொரு = பக்தி பொருந்தி நிற்கும்
புங்கவரும் = வானோரும் (தேவர்களும்)
புவியும் = மண்ணுலகத்தோரும்
பரவும் = துதித்துப் போற்றும்
குரு புங்கவ = சிறந்த குருமூர்த்தியே! குரு சிரேஷ்டனே!
எண் குண = அருட்குணங்கள் எட்டுக்கும்
பஞ்சரனே = உறைவிடமானவரே!
முருகன், குமரன், குகன் என்று
மொழிந்து உருகும் = ஜெபித்து உருகும்
செயல் தந்து = ஒழுக்க நிலையைத் தந்து
உணர்வு = ஞானநிலையை, மெய்யுணர்வை
என்று அருள்வாய் = எப்போது எனக்கு அருள் புரிவாய்

(16) பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ,
வீரா, முது சூர் பட வேல் எறியும்
சூரா, சுரலோக துரந்தரனே.

(17) யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்.
தாமே பெற, வேலவர் தந்ததனால்
பூமேல், மயல் போய், அறம் மெய் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே

(16) வீரா! முது சூர் பட = வீரனே! பழமையான சூரன் அழிவு பட
வேல் எறியும் சூரா = வேலாயுதத்தைச் செலுத்தின சூரனே
சுர லோக = தேவருலகை
துரந்தரனே = காத்தருளியவரே
பேராசை எனும் பிணியில்
பிணிபட்டு = கட்டுண்டு
ஓரா = ஆராய்கின்ற நல்லறிவு இல்லாத
வினையேன் = தீவினையுடைய அடியேன்
உழலத் தகுமோ = அலைச்சல் உறல் தகுதியோ! நீதியோ!

(17) யாம் ஓதிய = நாம் கற்று அறியும்
கல்வியும் = கல்வியறிவையும்
எம் அறிவும் = நமது இயற்கை அறிவையும்
தாமே பெற வேலவர் = வேலவர் நாம் பெறுவதற்காகவே
தந்ததனால் = வழங்கிய காரணத்தால்
பூ மேல் = பூமியில் உள்ள வரை
மயல் போய் = ஆசை மயக்கங்களை நீக்கி
அறம் மெய் = அறச்செயல்களையும், உண்மையையும்
புணர்வீர் = கடைப்பிடித்து அந்நெறியிற் சேருங்கள்
இனியே = இனி : இனிமேல்
நாமேல் நடவீர் நடவீர் = (இறைவன் அளித்த) நாவைக் கொண்டு அவன் புகழைப் பாடுங்கள், பாடுங்கள்.

(18) உதியா மரியா உணரா மறவா
விதி, மால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா, அமராபதி
காவல சூர பயங்கரனே.

(19) வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடி போகியவா
அடி அந்தம் இலா அயில் வேல் அரசே
மிடி என்று ஒரு பாவி வெளிப்படினே.

(18) உதியா மரியா = பிறவாமலும், இறவாமலும்
உணரா மறவா = நினையாமலும், மறவாமலும்
விதி, மால் அறியா = பிரமனும், திருமாலும் தேடிக் காணாதவனுமாய் விளங்கும்
விமலன் புதல்வா = மலமில்லாத பரிசுத்தமூர்த்தியாம் சிவபிரானது புதல்வனே
அதிகா = யாவரினும் மேம்பட்டவரே
அநகா = பாபமற்றவரே
அபயா = பயம் இல்லாதவரே (அல்) புகலிடம் அளிக்கும் மூர்த்தியே
அமராபதி காவல = அமராவதியைக் காப்பாற்றியவரே
சூர பயங்கரனே = சூரனுக்கு அச்சத்தை தந்தவரே. (கரம்: [illegible])

... ...

(19) அடி அந்தம் இலா = ஆதியும் அந்தமும் இல்லாத
அயில் வேல் அரசே = கூரிய வேலை ஏந்திய அரசே
மிடி என்று ஒரு பாவி = வறுமை என்ற ஒரு பாவி
வெளிப்படினே = தோன்றினால், (பிடித்தால்)
வடிவும் = அழகும்
தனமும் = செல்வமும்
மனமும் = நல்ல மனமும்
குணமும் = நற்குணமும்
குடியும் = பிறந்த குடியின் பெருமையும்
குலமும் = பிறந்த குலத்தின் பெருமையும்
குடி போகியவா = விட்டு விட்டு வேறு இடத்துக்குக் குடிபோய் விட்டன
(ஆ: வியப்புக் குறிப்பு)

(இத்தகைய மிடி இல்லாமல் நீ அருள வேண்டும் என்பது குறிப்பு)

(20) அரிது ஆகிய மெய்ப் பொருளுக்கு, அடியேன்,
உரிதா, உபதேசம் உணர்த்தியவா,
விரிதாரண, விக்ரம, வேள், இமையோர் புரி
தாரக, நாக புரந்தரனே.

(21) கருதா மறவா நெறிகாண, எனக்கு,
இருதாள் வனசம் தர, என்று இசைவாய்
வரதா, முருகா, மயில் வாகனனே
விரதா, அசுர சூர விபாடணனே.

(20) விரிதாரண = விரிந்து பரந்த உறுதியுள்ளவரே
விக்ரம = பராக்ரமத்தை உடையவரே
வேள் = செவ்வேளே; எல்லோராலும் விரும்பப்படுகின்றவரே
இமையோர் புரி = தேவர்கள் விரும்பும்; (புரி-புரிதல் விரும்புதல்)
தாரக = பிரணவப் பொருளே
நாகபுரம் தரனே = தேவுலகைத் தாங்குபவனே
அரிது ஆகிய = கிடைத்தற்கு அருமையான
மெய்ப் பொருளுக்கு = உண்மைப் பொருளைப் பெறுதற்கு
அடியேன், உரிதா = அடியவனாகிய நான், தகுதியுள்ளவனாகக் கருதி
உபதேசம் = உபதேச மொழியை
உணர்த்தியவா = போதித்த அருள் திறம் ஆச்சரியமானது

(21) வரதா = கேட்ட வரங்களை வழங்குபவரே
முருகா, மயில் வாகனனே
விரத அசுர சூர = அருவருப்புக்குரிய அசுரனாகிய சூரனை *
விபாடணனே = (வேலால்) பிளந்தவரே
கருதா மறவா = நினைப்பு மறப்பு அற்ற
நெறி காண = வழியைக் கண்டு கொள்ள
எனக்கு = அடியேனுக்கு
இருதாள் = இரண்டு திருவடிகளாம்
வனசம் தர = தாமரைகளைத் தருவதற்கு
என்று இசைவாய் = எப்பொழுது மனம் இரங்குவாய்
(திருவடி தீக்ஷை என்று பெறுவேன்)

* விரதா, அசுர சூர விபாடணனே என்றும் பொருள் கொள்ளலாம்
விரதா: விரதங்களின் இலட்சியமாக இருப்பவனே.

(22) காளைக் குமரேசன் எனக் கருதி,
தாளைப் பணிய, தவம் எய்திய வா,
பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளை, சுர பூபதி, மேருவையே

(23) அடியைக் குறியாது அறியாமையினால்,
முடியக் கெடவோ, முறையோ முறையோ,
வடி விக்ரம வேல் மகிபா, குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே.

(22) பாளைக் குழல் = கமுகின் பாளை போன்ற நீண்ட கூந்தலையுடைய
வள்ளிபதம் ... = வள்ளியின் பாதங்களைப் பணிகின்ற
வேளை = செவ்வேளாகிய முருகப் பெருமானை
சுர பூபதி = தேவர்களுக்கு தலைவராய
மேருவை (ஏ) = மேரு மலை ஒத்த பெருமையுடைய வரை
காளைக் குமரேசன் = காளைப் பருவத்து குமாரமூர்த்தி
எனக் கருதி = என்று தியானித்து
தாளைப் பணிய = அவரது திருவடியைப் பணியும்படியான
தவம் = தவநிலையை
எய்திய வா = நான் அடைந்த பேறு ஆச்சரியமானது

(23) வடி விக்ரம = கூர்மையும், பராக்ரமும் கொண்ட
வேல் மகிபா = வேலாயுதத்தை ஏந்திய அரசே
குற மின் கொடியை = குறவர் குலத்தில் வளர்ந்த மின்னல் கொடி
போன்ற வள்ளியை
புணரும் = சேர்கின்ற
குண பூதரனே = குணக் குன்றே
அடியைக் குறியாது = உமது திருவடியைக் குறித்து தியானிக்காமல்
அறியாமையினால் = அறிவின்மையால்
முடியக் கெடவோ = அடியோடு நான் அழிந்து படலாமோ
முறையோ முறையோ = இது நீதியோ! நீதியோ!

(24) கூர் வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன், அருள் சேரவும் எண்ணுமதோ
சூர் வேரொடு, குன்று தொளைத்த, நெடும்
போர் வேல, புரந்தர பூபதியே.

(25) மெய்யே என, வெவ்வினை வாழ்வை உகந்து,
ஐயோ, அடியேன் அலையத் தகுமோ,
கையோ, அயிலோ, கழலோ, முழுதும்
செய்யோய், மயில் ஏறிய சேவகனே.

(24) சூர் வேரொடு = சூரபத்மன் குலம் முழுவதையும்
குன்று தொளைத்த = அவனுக்கு அரணாயிருந்த எழுகிரிகளையும் தொளைத்த
நெடும் போர் வேல = நெடிய போர் செய்யவல்ல வேலாயுதத்தை ஏந்தியவரே
புரந்தர பூபதியே = இந்திரனுடைய உலகத்துக்கு தலைவரே
கூர் வேல் விழி = கூரிய வேல் போன்ற கண்களையுடைய
மங்கையர்... = மாதர்களின் தனங்களிலே
சேர்வேன் = சேர விரும்புகின்றவனாகிய சிறியேன்
அருள் சேரவும் = உமது திருவருள் கூடுமாறு
எண்ணுமதோ = எண்ணும் பாக்கியத்தைப் பெறுமோ

(25) கையோ = திருக்கரங்கள் மட்டுமோ
அயிலோ = கையில் ஏந்தும் வேலாயுதம் மட்டுமோ
கழலோ = திருவடிகள் மட்டுமோ
முழுதும் = திருமேனி முழுதும்
செய்யோய் = செந்நிறத்தில் அமைந்தவரே
மயில் ஏறிய = மயிலின் மீது ஏறிய
சேவகனே = பராக்ரமசாலியே
மெய்யே என = சதமான உண்மை வாழ்வென்று,
வெவ்வினை = கொடிய வினைக்கு ஈடான
வாழ்வை = இந்த வாழ்வில்
உகந்து = களித்து மகிழ்ந்து
ஐயோ = அந்தோ!
அடியேன் = அடியேன்
அலைய தகுமோ = உழலுதல் நீதியாமோ?

(26) ஆதாரம் இலேன், அருளைப் பெறவே,
நீதான், ஒரு சற்றும் நினைந்திலையே
வேத ஆகம, ஞான விநோத, மன அதீதா,
சுரலோக சிகாமணியே.

(27) மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்,
என்னே, விதியின் பயன் இங்கு இதுவோ,
பொன்னே, மணியே, பொருளே, அருளே,
மன்னே, மயில் ஏறிய வானவனே.

(26) வேத ஆகம = வேதங்களிலும், ஆகமங்களிலும் சொல்லப்பட்டவனே
வேத முதல்வனே; வேதம் தொகுத்தவனே; ஆகமம் வகுத்தவனே
ஞான விநோத = ஞான விநோதமூர்த்தியே
மன அதீதா = மனத்திற்கு எட்டாதவரே
சுரலோக = தேவலோகத்தின்
சிகாமணியே = முடிமணியாக விளங்குபவரே
ஆதாரம் இலேன் = ஒரு துணையும், பற்றுக்கோடும் இல்லாத அடியேன்
அருளைப் பெறவே = உனது திருவருளைப் பெறுமாறு
நீதான் ஒரு சற்றும் = தேவரீர் ஒரு சிறிதளவேனும்
நினைந்திலையே = நினைக்க வில்லையே! (ஈதென்ன பாவம்)

--- --- ---

(27) பொன்னே = பொன் போல அருமை வாய்ந்தவரே
மணியே = மணி போல ஒளி வீசுபவரே
பொருளே = உண்மைப் பொருளாய் விளங்குபவரே
அருளே = பேரருளுடையவரே
மன்னே = நிலை பெற்ற தலைவரே
மயில் ஏறிய வானவனே = மயில் வாகனம் கொண்ட தெய்வமே.
மின்னே நிகர் வாழ்வை = மின்னலைப் போல் தோன்றி உடனே மறையும்
நிலையில்லாத உலக வாழ்வை நிலைத்ததென எண்ணி
விரும்பிய யான் = விரும்பியுள்ள அடியேன்
என்னே = (இதற்குக் காரணம்) என்ன என்று சொல்வேன்
விதியின் பயன் = என் தலைவிதியின் பயன் தானோ (காரணமோ)
இங்கு இதுவோ = இங்கு இவ்வாறு நானிருத்தல்

(28) ஆறு அமுதே, அயில் வேல் அரசே
ஞானகரனே, நவிலத் தகுமோ,
யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே.

(29) இல்லே எனும் மாயையில் இட்டனை நீ,
பொல்லேன், அறியாமை பொறுத்திலையே,
மல்லே புரி பன்னிரு வாகுவில், என்
சொல்லே புனையும், சுடர் வேலவனே.

(28) ஆறு அமுதே = கெடுதலில்லாத அமுதம் போன்ற இனியவரே
அயில் வேல்அரசே = கூரிய வேல் ஏந்திய அரசே
ஞான ஆகரனே = ஞானத்திற்கு இருப்பிடமானவனே
யான் ஆகிய என்னை = யான், யான் என்று ஆணவ நிலையிற் சொல்லும் என்னை
விழுங்கி = தன்னுட் கொண்டு (சீவ போதத்தைப் போக்கி சிவ போதத்துள் அடக்கிக் கொண்டு)
வெறும் தானாய் = வேறு ஒன்றும் இல்லாது எல்லாம் தானேயாய்
நிலை நின்றது = நிலைத்திருப்பதான
தற்பரமே = மேலான நிலையை (இத்தன்மையது என்று)
நவிலத் தகுமோ = எடுத்து விளக்கிச் சொல்ல முடியுமோ? (முடியாது)
(அநுபவித்து அநுபவத்தில் காண்பதேயன்றி சொல்ல முடியாது)

--- --- --- ---

(29) மல்லே புரி = மற்போர் புரிவதற்கு ஏற்றதான
பன்னிரு வாகுவில் = பன்னிரண்டு திருத்தோள்களிலும்
என் சொல்லே = அடியேனுடைய பாடல்களையே
புனையும் = ஏற்று அணிந்து கொள்ளும்
சுடர் வேலவனே = ஒளி வீசும் வேலாயுதனே
இல்லே எனும் = இல்வாழ்க்கையென்னும்
மாயையில் = மாய வாழ்வில்
நீ இட்டனை = அடியேனை அகப்படச் செய்து விட்டீர்
பொல்லேன் = கொடியவனாகிய எனது
அறியாமை = அறிவீனத்தைப் (அறிவீனத்தால் செய்த பிழைகளை)
பொறுத்திலையே = பொறுத்து மன்னித்தாயில்லையே.

(30) செவ்வான் உருவில் திகழ் வேலவன், அன்று,
ஒவ்வாதது என, உணர்வித்த அது தான்,
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்,
எவ்வாறு, ஒருவர்க்கு இசைவிப்பதுவே

(31) பாழ் வாழ்வு எனும் இப் படுமாயையிலே,
வீழ்வாய் என என்னை விதித்தனையே,
தாழ்வானவை செய்தன தாம் உளவோ.
வாழ்வாய் இனி, நீ, மயில் வாகனனே.

(30) செவ்வான் உருவில் = செக்கர் வானத்தின் உருவத்துடன்
திகழ் வேலவன் = விளங்கும் வேற் பெருமான்
அன்று = அந்நாளில்
ஒவ்வாதது என = இந்த உபதேசத்துக்கு நிகரானது வேறொன்றுமில்லை என்று சொல்லும்படி
உணர்வித்த அது தான் = எனக்கு உபதேசத்தால் உணர்த்திய அந்த ஞான நிலை
அவ்வாறு அறிவார் = அங்ஙனம் உபதேசம் பெற்று அறிபவர்கள்
அறிகின்றது அலால் = தமக்குள் உள்ளுணர்வால் உணர்வதல்லாமல்
ஒருவர்க்கு எவ்வாறு இசைவிப்பது = அதனை மற்றொருவருக்கு வார்த்தைகளால் எப்படிச் சொல்ல முடியும்? (முடியாது)

---

(31) மயில் வாகனனே = மயில் வாகனக் கடவுளே.
பாழ் வாழ்வு எனும் = பாழ்படுவதான இந்த வாழ்க்கை என்கின்ற
இப்படுமாயையிலே = இந்தப் பெரிய மாயைச் சுழலிலே
வீழ்வாய் என = நீ விழுவாயாக என்று
என்னை விதித்தனையே = என் தலையில் எழுதி விட்டாயே
தாழ்வானவை = இழிவான செய்கைகள்
செய்தன தாம் = நான் முன்பு செய்தவை தாம்
உளவோ = ஏதேனும் இருக்கின்றனவோ?
(நீ என்னை இங்ஙனம் மாயை வாழ்வில் தள்ளிச் சிக்க வைத்ததற்குக் காரணம்)
நீ வாழ்வாய் இனி = நீ இனிமேலும் வாழ்வாயாக.

(32) கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமாறு. அதுவாய் விடவோ.
கொலையே புரி வேடர் குலப்பிடி தோய்
மலையே, மலை கூறிடு வாகையனே.

(33) சிந்தாகுல இல்லொடு, செல்வம் எனும்
விந்தாடவி என்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே,
கந்தா, முருகா, கருணாகரனே.

(32) கொலையே புரி = கொலைத் தொழில்களையே செய்கின்ற
வேடர் குலப் பிடி = வேடர் குலத்தில் வளர்ந்த பெண்யானை போன்ற வள்ளி
தோய் மலையே = புணரும் மலை போன்றவரே
மலை கூறிடு = கிரௌஞ்ச-கிரியைப் பிளவு செய்த
வாகையனே = வெற்றி வேலனே
கலையே பதறி கதறி = கலை நூல்களையே கலக்கத்துடன் உருப்போட்டு கற்று (அல)
சாஸ்திர நூல்களையே மனம் கலங்கிச் சத்தமிட்டுப் பேசி
தலையூடு அலையே படுமாறு = தலை வேதனை படும்படி - தலையுள் மூளையே
கலங்கும்படியான
அது வாய் = அத்தன்மையனாய் - அந்நிலையனாய்
விடவோ : ஆகி விடவோ! (அந்நிலை வேண்டாம் என்றபடி)

--- --- ---

(33) மந்தாகினி தந்த = கங்காநதி ஈன்ற
வரோதயனே = வரத்திற்கு பிறப்பிடமானவனே
கந்தா முருகா = கந்தனே முருகனே
கருணாகரனே = கருணைக்கு இருப்பிடமானவனே
சிந்தாகுல(ம்) = மனத்துக்கு வருத்தம் தருவதான
இல்லொடு = சமுசாரத்துடன்
செல்வம் எனும் = செல்வம் என்கின்ற
விந்தாடவி = விந்தமலைக்காடு போன்ற துயரத்தை
என்று விடப் பெறுவேன் : என்று நான் நீங்கப் பெறுவேன்.

(34) சிங்கார மடந்தையர் தீ நெறி போய்
மங்காமல் எனக்கு எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகாவல, ஷண்முகனே,
கங்கா நதி பால, க்ருபாகரனே.

(35) விதி காணும் உடம்பை விடா வினையேன்
கதி காண, மலர்க் கழல் என்று அருள்வாய்,
மதி வாள் நுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா, சுர பூபதியே.

(34) சங்க்ராம = போரில் வல்ல
சிகாவல = மயிலை உடையவரே
சண்முகனே = ஆறுமுகக் கடவுளே
கங்காநதிபால = கங்காநதியின் புதல்வரே
க்ருபாகரனே = கருணைக்கு இருப்பிடமானவரே
சிங்கார மடந்தையர் = அலங்காரம் புரிந்து கொள்ளும் பொது மாதர்களின்
தீ நெறி போய் = தீய வழியிற் சென்று
மங்காமல் = என் மனம் குலைந்து போகாத வண்ணம்
எனக்கு வரம்... = எனக்கு வரம் தந்தருளுக

. . .   .

(35) மதி வாள் = பிறைச் சந்திரனையொத்த ஒளி வீசுகின்ற
நுதல் = நெற்றியையுடைய
வள்ளியை அல்லது = வள்ளி பிராட்டியைத் தவிர
பின் = வேறு ஒருவரையும்
துதியா = துதிக்காத
விரதா = நோன்பு பூண்டவரே
சுர பூபதியே = தேவர்களுக்கு அரசே
விதி காணும் = பிரமதேவன் படைத்த
உடம்பை விடா = உடலுக்கு இடம் தரும் பிறப்பை விடாத
~~வினை~~ வினையேன் = வினை நிறைந்த அடியேன்
கதி காண = நல்ல கதியை அடையும்படி
மலர் கழல் = தாமரையன்ன உமது திருவடியை
என்று அருள்வாய் = எப்போது அருள் புரிவாய்

(36) நாதா, குமரா நம என்று, அரனார்,
ஓதாய் என ஓதியது எப்பொருள்தான்,
வேதா முதல் விண்ணவர் சூடும், மலர்ப்
பாதா, குறமின், பத சேகரனே.

(37) கிரிவாய் விடு, விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம், மேவலையே
புரிவாய், மனனே, பொறையாம் அறிவால்,
அரிவாய், அடியோடும் அகந்தையையே

(36) வேதா முதல் விண்.. = பிரமன் முதலான தேவர்கள்
சூடும் = தங்கள் தலையில் சூடிக் கொள்ளுகின்ற
மலர்ப் பாதா = தாமரையன்ன திருவடிகளை உடையவரே
குறமின் = மின்னற் கொடி போன்ற வள்ளி பிராட்டியின்
பத சேகரனே = திருவடியை முடிமேற் கொள்பவனே
அரனார் = சிவ பெருமான்
நாதா குமரா நம.. = நாதனே! குமாராய நம
என்று = என்று வணங்கி
ஓதாய் என = எனக்கு உபதேசிப்பாயாக என்று கேட்க
ஓதியது = நீ உபதேசித்தது
எப்பொருள்தான் = எத்தகைய பொருள்? (அதை அடியேனுக்கும் உபதேசித்தருளுவீராக)

...

(37) மனனே = ஏ மனமே
கிரிவாய் விடு = கிரௌஞ்சகிரியின் மீது (விடு) செலுத்தின
விக்ரம = பராக்ரமம் உள்ள
வேல் இறையோன் = வேலை ஏந்திய இறைவன் முருகவேளின்
பரிவாரம் எனும் பதம் = (அடியார்) கணத்தைச் சேர்ந்தவன் என்னும் பதவியை
மேவலையே = அடைதலையே
புரிவாய் = நீ விரும்புவாயாக
அகந்தையையே = நான் என்னும் ஆணவத்தையே
பொறையாம் அறிவால் = பொறுமை என்கின்ற அறிவைக் கொண்டு
அடியோடு அரிவாய் = வேருடனே அரிந்து தள்ளுவாயாக

(38) ஆதாளியை, நன்று அறியேனை, அறத்
தீதாளியை, ஆண்டது செப்புமதோ,
கூதாள, கிராத குலிக்கு இறைவா,
வேதாள கணம் புகழ், வேலவனே.

(39) மா ஏழ் சனனம் கெட, மாயை விடா
மூ ஏடணை, என்று முடிந்திடுமோ,
கோவே, குறமின் கொடி தோள் புணரும்
தேவே, சிவ சங்கர தேசிகனே.

(38) கூதாள = கூதாள மலரை அணிந்தவரே
கிராத குலிக்கு = வேடர் குலத்தவளாம் வள்ளிக்கு
இறைவா = தலைவரே
வேதாள கணம்புகழ் = பேய்க் கூட்டங்கள் புகழ்கின்ற
வேலவனே = வேற்படையை உடையவரே
ஆதாளியை = டம்பப் பேச்சுக்களைப் பேசுபவனும்
நன்று அறியேனை = நல்லது நன்றும் அறியாதவனும்
அறத் தீதாளியை = மிகவும் தீக்குணம் உடையவனும் ஆகிய என்னை
ஆண்டது = ஒரு பொருளாகக் கருதி ஆட்கொண்ட கருணையை
செப்புமதோ = சொல்லும் தரத்ததோ?

... ...

(39) கோவே = அரசே
குற மின்கொடி = குறக் குலத்தவளும், மின்னற் கொடி போன்ற வளுமான வள்ளியின்
தோள் புணரும் = தோள்களை அணையும் (தேவே) தேவனே
சிவ சங்கர = மங்கல மூர்த்தியும், சுகத்தைச் செய்பவருமான சிவபெருமானின்
தேசிகனே = குருநாதரே
மா ஏழ் சனனம்.. = பெரிய ஏழு வகையான பிறவிகளும்
கெட = தொலையுமாறு,
மாயை விடா = ஆசை மயக்கம் நீங்காத
மூ ஏடணை * = மூன்று ஈஷணைகளும் (ஆசைகளும்)
என்று முடிந்திடுமோ = எப்போது தான் முடிவுற்று ஒழியுமோ?

*: தாரேஷணை, புத்திரேஷணை, தனேஷணை. ஏஷணை: ஆசை

(40) வினை ஓட விடும் கதிர் வேல் மறவேன்,
மனையோடு தியங்கி மயங்கிடவோ;
சுனையோடு, அருவித் துறையோடு, பசும்
தினையோடு. இதணோடு திரிந்தவனே.

(41) சாகாது எனையே, சரணங்களிலே
கா கா, நமனார் கலகம் செயுநாள்,
வாகா, முருகா, மயில் வாகனனே.
யோகா, சிவஞான உபதேசிகனே.

(40) சுனையோடு = சுனையினிடத்தும்
அருவித் துறையோடு : அருவிகள் விழும் துறைகளினிடத்தும்
பசும் தினையோடு : பசிய தினைப்புனத்திடத்திலும்
இதணோடு = பரணிடத்தும்
திரிந்தவனே = (வள்ளிநாயகிக்கு அருள் செய்யும் பொருட்டு) திரிந்தவனே
வினை ஓட விடும் = இருவினைகளும் ஓடும்படிச் செய்கின்ற
கதிர் வேல் = ஒளி பொருந்திய வேலாயுதத்தை
மறவேன் = நான் மறக்க மாட்டேன்
மனையோடு தியங்கி: சம்சார வாழ்வில் மயங்கி
மயங்கிடவோ = மயக்கம் கொள்ளவாமா? (கொள்ளலாகாது)

--- --- ---

(41) வாகா முருகா = வெற்றிவேலனே (or) அழகனே, முருகா
மயில் வாகனனே = மயில் வாகனனே
யோகா = யோக மூர்த்தியே
சிவஞான உபதேசிகனே = சிவஞானத்தை உபதேசிக்கின்றவனே
நமனார் = யமன்
கலகம் செயுநாள் = என் உயிரைக் கலக்கிப் பிடிக்க வரும் அந்நாளில்
சாகாது = நான் இறவாதபடி
எனையே = என்னை
சரணங்களிலே : உன் திருவடிகளிலே
கா கா = காப்பாற்றுவாயாக, காப்பாற்றுவாயாக -
(திருவடி நிழலில் தங்குமாறு செய்து
காத்தருள்வீராக) ....

வா கா : வந்து காத்தருள் என்றும் பொருள் கூறலாம்

(42) குறியைக், குறியாது குறித்து அறியும்
நெறியை, தனிவேல் ஐ நிகழ்த்திடலும்,
செறிவற்று, உலகோடு, உரை சிந்தையும் அற்று,
அறிவற்று அறியாமையும் அற்றதுவே.

(43) தூசா மணியும், துகிலும் புனைவாள்
நேசா, முருகா, நினது அன்பு அருளால்,
ஆசா நிகளம், துகள் ஆயின பின்,
பேசா அநுபூதி பிறந்ததுவே.

(42) குறியை = தியானிக்கப்படுகின்ற பொருளை
குறியாது = பசு ஞானம், பாச ஞானம் கொண்டு தியானிக்காமல், காலம் இடம் முதலியன இன்றி பிறவற்றை நினையாமலு
குறித்து = பதிஞான வழியில் அதனையே தியானித்து
அறியும் நெறியை = அறிகின்ற உண்மை வழியை
தனி வேல் ஐ = ஒப்பற்ற வேலாயுதத்தை யுடைய(ஐ) கடவுள்
நிகழ்த்திடலும் = உள் நின்று உணர்த்திய வுடனே
உலகோடு = உலகத்தாருடன் நெருங்கும்
செறிவு அற்று = உறவுகள் நீங்கி,
உரை சிந்தையும் அற்று = வாக்கும் மனமும் நீங்கி ஒழிந்து
அறிவற்று = அறிவு என்பதும் நீங்கி
அறியாமையும் அற்றதுவே = அஞ்ஞானமும் நீங்கிற்று

...

(43) தூசா = தூசாக - ஆடை அலங்காரமாக
மணியும் = முத்து மணி, மரகத மணி முதலிய மணிகளையும்
துகிலும் புனைவாள் = ஆடையும் அணியும் வள்ளி பிராட்டியின்
நேசா முருகா = நண்பனே! முருகா!
நினது அன்பு அருளால் = உனது அன்பும் அருளும் கிடைத்த பாக்கியத்தால்
ஆசா நிகளம் = ஆசை என்னும் விலங்கு
துகள் ஆயின பின் = பொடிபட்ட பின்பு
பேசா அநுபூதி = மௌனம் என்ற அநுபூதி நிலை
பிறந்ததுவே = அடியேனுக்குத் தோன்றியது.

(44) சாடும், தனி வேல் முருகன், சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ.
வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெங்
காடும், புனமும் கமழும் கழலே.

(45) கரவாகிய கல்வி உளார் கடை சென்று
இரவா வகை, மெய்ப் பொருள் ஈகுவையோ
குரவா, குமரா, குலிசாயுதா, குஞ்சரவா
சிவ யோக தயாபரனே.

(44) சாடும் = பகைவர்களை அழிக்கின்ற
தனி வேல் முருகன் = ஒப்பற்ற வேலாயுதத்தை உடைய முருகன்,
வீடும் = மோட்சத் தலத்திலும்
சுரர் மாமுடி = தேவர்களின் சிறந்த தலையிலும்
வேதமும் = நான்கு வேதங்களிலும்
வெங்காடும் = கொடிய காட்டிடையும்
புனமும் கமழும் = தினைப்புனத்திலும் மணக்கும்படி விளங்கும்
கழல் = தமது திருவடியை
சரணம் சூடும்படி = அடைக்கல ஸ்தானமாகச் சிரசிற் சூடும்படி
தந்தது = தந்தருளிய கருணை
சொல்லுமதோ = சொல்லும் தரத்ததா! (அன்று என்றபடி)

---

(45) குரவா = குருமூர்த்தியே
குமரா = குமரப் பெருமானே
குலிசாயுதா = வஜ்ராயுதத்தை உடையவனே
குஞ்சரவா = தெய்வயானைக்கு நாயகரே
சிவயோக தயாபரனே = சிவயோகத்தைப் பாலிக்கும் கருணாமூர்த்தியே
கரவாகிய கல்வி யுளார் கடை சென்று = தாம் கற்ற கல்வியைப் பிறருக்குச் சொல்லாமல் ஒளித்து வைக்கின்றவர்களின் (கடை) இடங்களிற் சென்று
இரவா வகை = அக்கல்வி ஞானத்தை யாசிக்காத வண்ணம்
மெய்ப்பொருள் = உண்மை ஞானப் பொருளை
ஈகுவையோ = உபதேசித்து அருள் புரிவையோ!

(46) எம் தாயும், எனக்கு அருள் தந்தையும் நீ,
சிந்தாகுலமானவை தீர்த்து எனை ஆள்,
கந்தா, கதிர் வேலவனே, உமையாள்
மைந்தா, குமரா, மறைநாயகனே.

(47) ஆறு ஆறையும் நீத்து, அதன் மேல் நிலையை,
பேறு, அடியேன், பெறும் ஆறு உளதோ,
சீறு வரு, சூர் சிதைவித்து, இமையோர்
கூறு, உலகம் குளிர்வித்தவனே.

(46) கந்தா = கந்தப் பெருமானே
கதிர் வேலவனே = ஒளி வீசும் வேலாயுதனே
உமையாள் மைந்தா = உமாதேவியின் மைந்தனே
குமரா = குமரனே
மறை நாயகனே = வேதங்களுக்குத் தலைவரே
எம் தாயும் = எங்களுக்கு அன்னையும்
எனக்கு அருள் = எனக்கு அருள் செய்யும்
தந்தையும் நீ = தந்தையும் நீர்தான்
சிந்தாகுலமானவை = என் மனக் கவலைகள் யாவற்றையும்
தீர்த்து எனை ஆள் = ஒழித்து என்னை ஆண்டருள்வீராக

---

(47) சீறு வரு = சீறிக் கோபித்து வந்த
சூர் சிதைவித்து = சூரபத்மனை அழிவு செய்து,
இமையோர் = தேவர்களின்
கூறு = (கூறுக) பங்காகும்படி
உலகம் = அவர்களின் பொன்னுலகத்தை
குளிர்வித்தவனே = இன்ப நிலை வரும்படி குளிர வைத்தவனே
ஆறு ஆறையும் = முப்பத்தாறு தத்துவங்களையும்
நீத்து = கடந்து
அதன் மேல் நிலையை = அதற்கப்பால் உள்ள முத்தி நிலையை
பேறு = பெறும் பேறாக
அடியேன் = அடியேன்
பெறும் ஆறு உளதோ = பெறுகின்ற பாக்கியம் எனக்கு உண்டோ

(48)
அறிவு ஒன்று அற நின்று அறிவார் அறிவில்,
பிரிவு ஒன்று அற நின்ற, பிரான் அலையோ
செறிவு ஒன்று அற வந்து, இருளே சிதைய,
வெறி வென்றவரோடு உறும் வேலவனே

(49)
தன்னம் தனி நின்றதுதான், அறிய,
இன்னம் ஒருவர்க்கு, இசைவிப்பதுவோ
மின்னும் கதிர்வேல் விகிர்தா, நினைவார்
கின்னம் களையும், க்ருபை சூழ் சுடரே

(48) செறிவு ஒன்று அற வந்து } உலக பந்த பாசமான நெருக்கமான உறவுகள் அற்றுப் போகும் நிலை வந்து
இருளே சிதைய = அதனால் அஞ்ஞானம் என்னும் இருள் சிதைந்து அழியும்படி
வெறி வென்றவரோடு = கலக்க மயக்கத்தை வென்ற ஞானியர்களுடனே
உறும் வேலவனே = பொருந்தியிருக்கும் வேற் கடவுளே,
அறிவு ஒன்று அற = ஜீவபோதம் கடந்த நிலை வர
நின்று = அந்நிலையில் நின்று
அறிவார் = சிவபோதத்தால் உன்னை அறியும் சிவ ஞானிகளின்
அறிவில் = ஞான நிலையில்
பிரிவு ஒன்று அற நின்ற = பிரிதலின்றி என்றும் கூடி நிற்கும்
பிரான் அலையோ = பெருமான் நீரேயன்றோ! (ஞான வடிவாய் நின்ற அந்த ஞானத்தை அடியேனுக்கு அருளுவீராக)

---

(49) மின்னும் கதிர்வேல் = ஒளி வீசும் கிரணங்களை உடைய வேலை ஏந்திய
விகிர்தா = பல்வேறு வடிவங்களையுடையவரே
நினைவார் = உன்னை நினைத்துத் தியானிப்பவர்களின்
கின்னம் களையும் = துன்பங்களை நீக்கும்
க்ருபை சூழ் சுடரே = கருணை விளங்கும் பேரொளியே
தன்னம் தனி நின்றது தான் } ஒரு சார்பும் இல்லாது தனிமையான இனிமையில் நிலை நின்ற பேரின்பத்தை
அறிய = மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படி
இன்னம் ஒருவர்க்கு = பின்னும் எடுத்து பிறிது ஒருவர்க்கு
இசைவிப்பதுவோ = சொல்ல இயலுமோ - இயலாது என்றபடி

(50) மதி கெட்டு, அற வாடி, மயங்கி, அறக்
கதி கெட்டு, அவமே, கெடவோ கடவேன்,
நதி புத்திர, ஞான சுக அதிப, அ
திதி புத்திரர் வீறு அடு சேவகனே.

(51) உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய், அருள்வாய். குகனே

(50) நதி புத்திர = கங்கா நதிக்கு மைந்தனே
ஞான சுக அதிப = ஞானத்துக்கும் சுகத்துக்கும் தலைவனே
அ திதி புத்திரர் = அந்தத் திதியின் புதல்வர்களாம் அசுரர்களின்
வீறு அடு சேவகனே = வலிமையை அழித்த பராக்ரமசாலியே
மதி கெட்டு = என் அறிவு குலைந்து
அற வாடி = மிகவும் உள்ளம் சோர்வுற்று
மயங்கி = மயக்கமுற்று
அற கதி கெட்டு = அற நெறியால் வரும் அநுபூதி நிலையை இழந்து
அவமே = வீணாக
கெடவோ = கெட்டொழிதலோ – கெட்டொழிந்து விடவோ
கடவேன் = உரியவன் – என் தலை விதி.

— — — — — — — — —

(51) உருவாய் அருவாய் = உருவுள்ளவராயும், உருவம் இல்லாதவராயும்
உளதாய் = உள்ள பொருளாகவும்
இலதாய் = காண்பதற்கு இல்லாத பொருளாகவும்
மருவாய் மலராய் = நறுமணமாகவும், அந்நறுமணத்தை வீசும் மலராகவும்
மணியாய் = இரத்தின மணியாகவும்
ஒளியாய் = அம்மணியில் உள்ள ஒளியாகவும்
கருவாய் = உயிர் இடம் பெறும் கருவாகவும் (உடலாகவும்)
உயிராய் = அக்கருவிருக்கும் உயிராகவும்
கதியாய் = ஆன்மாக்கள் முடிவில் அடையும் வீடு பேறாகியும்
விதியாய் = வீடு பேற்றை அடையும் நன்னெறியாகவும் விளங்கும்
குகனே = குக மூர்த்தியே
குருவாய் வருவாய் அருள்வாய் = குருமூர்த்தியாக எழுந்தருளி வந்து அருள் புரிவீராக

KANDAR ANUBHUTI (God Experience)

by

N.V. KARTHIKEYAN (SIVANANDA ASHRAM)

The Esoteric Significance of Kandar Anubhuti

Verse 1 ஆடும் பரி, வேல், அணி சேவல் எனப் பாடும் பணியே
பணியா அருள்வாய்

V.2. உல்லாச, நிராகுல - - - -
எல்லாம் அற என்னை இழந்த நலம் <u>சொல்லாய்</u>, முருகா . .

V-5 மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகம் ஆறும் <u>மொழிந்தும்</u> ஒழிந்திலனே.

V-8 அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்
பிமரம் கெட மெய்ப் பொருள் <u>பேசியவா</u>.

V-11 கூகா என என் கிளை கூடி அழப்
போகா வகை மெய்ப் பொருள் <u>பேசியவா</u>.

V.12 செம்மான் மகளை - - - - .
<u>சும்மா</u> இரு சொல் அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே

V.15 முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல் தந்து <u>உணர்வு</u> என்று அருள்வாய்

V.20 அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் <u>உணர்த்தியவா</u>

V.20 அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் <u>உணர்த்தியவா</u>.

V.30 செவ்வான் உருவில் திகழ் வேலவன் அன்று
ஒவ்வாதது என <u>உணர்வித்தது</u> அது தான்

V.42 குறியைக் குறியாது குறித்து அறியும்
நெறியைத் தனிவேலை <u>நிகழ்த்திடலும்</u>

Esoteric Significance

The word Kandar Anubhuti is given primarily from a Sadhaka's viewpoint to help him attain God Experience. The work as a whole forms an exposition of the path to Anubhuti.

I The beginning of Sadhana (verses 1 to 3)
II Coming to Brass Tacks and the Beginning of the Decent of Divine Grace (Verses 4 to 13)
III Preparation [illegible] and Initiation into Meditation (Verses 14 to 20)
IV The Inner Struggle and a Glimpse (Verses 21 to 28)
V The Indescribable condition (Verses 29 to 32)
VI The All consuming Aspiration and the final Push (Verses 33 to 38)
VII The final Jump and God Experience (Verses 39 to 43)
VIII Lokasangraha (Verses 44 to 50)
IX Sahaja Samadhi Avastha (Verse 51)

V-1 ஓம்பரி.., In the first verse itself the practical sadhana of Nama Japa or Nama-Sankirtana is pointed out by way of asking for that ONLY Boon.

V-5 முகம் ஆறும் மொழிந்தும் ... : Here Japa is not enough; the ~~ban~~ heart also should go with it to God.

Hence the prayer in V.15 - முருகா, குமரா, குகா என்று மொழிந்து உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்.

V-12 'சும்மா இரு' was the upadesa. How was this given? "சொல் அற என்றல்": This was a speechless upadesa.

Mowna or silence is of three kinds: Kashtha Mowna, Vang-Mowna, Mano Mowna. There is another kind of Mowna, the spiritual mowna, which is altogether of a different nature, which includes and transcends the three types, which can be had only by God's grace. Spiritual Mowna is the silence of the soul, or the resting of the Jiva in God-Awareness, wherein the mind automatically rests in silence, the mouth speaks not and the body does not move.

The Upadesa 'be silent' is the last instruction in the spiritual path. And it is needless to say that is to be given through silence.

Dakshinamurthi explained the lower stages of Yoga to the four Kumaras, but when the final stage of Samadhi was to be taught, he remained in Samadhi and made them too enter into Samadhi. He revealed that state to them, not through any instruction but by Being. This is the mystery of revelation of God-Experience.

<u>பேசியவா : உணர்த்தியவா.</u>

While in verses 8 and 11, it is "பேசுதல்" which is an external act. In verse 20, it is 'உணர்த்தியவா' உணர்த்துதல், which is an inner experience. The Lord manifests himself in the heart of the devotee as the very self, which at once brings experience; when God manifests, Universal consciousness supervenes the individual consciousness.